**Total No. of Pages: 3**

# 8288

Register Number:

Name of the Candidate:

## FOUNDATION PROGRAMME EXAMINATION December 2014

**(FIRST YEAR)**

**(PART – I)**

**120: TAMIL PAPER – II**

**(Common with Foundation Programme I Year in Music)**

Time: Three hours | Maximum: 80 marks

---

**1. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து நலம் பாராட்டி எழுதுக.** **(1 × 10 = 10)**

"தமிழர்க்குத் தமிழ்மொழியில் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும் வேண்டும்
தமிழில் இலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்
அமுதம்போல் செந்தமிழில் கவிதை நூல்கள்
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூல்கள்
சுமைசுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்"

- பாரதி தாசன்

**2. கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியைக் கருத்துச் சிதைவின்றி மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.** **(1 × 10 = 10)**

கல்வி எல்லோருக்கும் இன்றியமையாதது பண்டைக் காலத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் கற்று வல்லவர்களாயும் அறிஞர்களால் மதிக்கப்பட்டவர்களாயும் இருந்தனர். தன் கடமையை உணரவும் தன்னை மேனிலைப் படுத்தவும் ஆணுக்குக் கல்வியானது எத்துணை உதவியுள்ளதோ பெண்ணுக்கும் அத்துணை உதவியாய் இருந்தள்ளது. கோசல நாட்டுப் பெண்கள் கல்வியும் செல்வமும் பெற்றவர்களாக இருந்தமையால் வீடுகள் தோறும் விருந்தும் ஈகையும் சிறந்து விளங்கின எனக் கம்பர் கூறுவார். ஆனால் இக்காட்சி தமிழ்நாட்டில் நிலைத்திருக்கவில்லை. பெண்கள் அடிமைகள் என்றும் இல்லில் அடங்கியிருப்பவர்கள் என்றும் கருதியபோக்கு இடையில் ஏற்பட்டுவிட்டது. பெண்களுக்குக் கல்வி தடுக்கப்பட்டது. பெண்கள் கணவனுக்கு மந்திரிபோல இருக்கவேண்டும் என்றார்கள். பெண்கள் இல்லறத்தை நல்லறமாக்க வேண்டும் என்றார்கள். பெண்கள் கணவனுடைய புகழை உயர்த்துபவர்கள் எனவும்

**8288**

புனைந்தார்கள் ஆனால் அவர்களே அறிவைத் தடைப் படுத்தியும் விட்டார்கள், அறிவு வளர்ச்சிக்கு முற்றுப் புள்ளியும் வைத்துவிட்டார்கள். அந்த இழிநிலை பிற்காலத்தில் பாரதி உள்ளிட்ட கவிஞர்கள், சிந்தனையாளர்களால் மாற்றப்பட்டது.

3. அ) உங்கள் புறநகர்ப் பகுதிக்கு பொது நூலகம் அமைத்துத் தருமாறு மாவட்ட நூலக இயக்குநருக்கு ஓர் விண்ணப்பம் வரைக.

(அல்லது)

ஆ) சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி வேண்டி வங்கி மேலாளருக்கு ஓர் வேண்டுகோள் மடல் விடுக்க. **(1 × 10 = 10)**

**4. கீழ்காணும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று பற்றி இரண்டு பக்க அளவில் கட்டுரை வரைக.** **(1 × 10 = 10)**

அ) பல்லவர் கலை மிளிரும் மாமல்லபுரம்

ஆ) விடுதலைப் போரில் தமிழ்க் கவிஞர்கள்.

இ) இளைஞர்களின் எதிர்காலம்.

**5. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று பற்றி இரண்டு பக்க அளவில் கட்டுரை வரைக.** **(1 × 10 = 10)**

அ) வியத்தகு வளர்ச்சியில் விஞ்ஞான உலகம்.

ஆ) இயற்கையைக் காப்போம்

இ) நீரும் நிலமும் வளம் நிறைய வழி காண்போம்.

6. மொழிப் பயிற்சி

**அ) எவையேனும் இரண்டினை நும் சொந்த நடையில் அமைத்து எழுதுக. (2 × 2 = 4)**

(1) பாம்பின்கால் பாம்பறியும்.

(2) ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது.

(3) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

(4) உள்ளங்கை நெல்லிக்கனி போல.

(ஆ) புலவர் குழந்தை இராவணகாவியத்தை இயற்றினார்

- இத்தொடரை செயப்பாட்டு வினைத் தொடராக மாற்றுக. **(1 × 2 = 2)**

**(ஆ) பிழை நீக்குக:** **(3 × 2 = 6)**

(1) வயிறாற உண்டும் பசிதீறவில்லை.

(2) எலிமை, தெலிவு, இணிமை - எளுத்தில் தேவை.

(3) ஆடும் மாடும் மேய்ந்தது.

**7. பின்வரும் வினாக்களுக்கு விடையளி** **(4 × 2 = 8)**

அ) மூவகை மொழிகள் யாவை?

ஆ) உருபு மயக்கம் என்றால் என்ன?

இ) அறிவினா, ஏவல் வினா - விவரி.

ஈ) கொண்டுகூட்டுப் பொருள்கோளினை விவரி.

**8. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.** **(5 × 2 = 10)**

அ) முல்லைத் திணையின் கருப்பொருள்களை எழுதுக.

ஆ) வெட்சித்திணை - விளக்கம் தருக.

இ) இன்னிசை வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.

ஈ) வஞ்சப் புகழ்ச்சி அணியை விளக்குக.

உ) அலகிட்டு வாய்பாடு கூறுக:
‘எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு”

%%%%%%%